# වාර්ෂික වාර්තාව

# ஆண்டறிக்கை

# ANNUAL REPORT

# 2012

**ඉඩම් මැනුම් සභාව**
**நில அளவைச்சபை**
**Land Survey Council**

ඉඩම් හා ඉඩම් සංවර්ධන අමාත්‍යාංශය
**காணி, காணி அபிவிருத்தி அமைச்சு**
**Ministry of Land and Land Development**

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | தலைவரின் செய்தி | 03 |
| 2. | தொலைநோக்கும், செயற்பணி | 05 |
| 3. | நில அளவைச் சபையின் செயற்பாடுகள் | 06 |
| 4. | நில அளவைச் சபையின் அதிகாரங்கள் | 07 |
| 5. | 2012 ஆம் ஆண்டுக் காலப்பகுதிக்கான நில அளவைச் சபையின் செயலாற்று அறிக்கை | 08 |
| 6. | சபை ஊழியர்கள் | 09 |
| 7. | செயற்பாடுகள் | 10 |
| 8. | கல்வியும், பயிற்சியும் | 12 |
| 9. | நிதி நடவடிக்கைகள் பற்றிய மீளாய்வு | 13 |
| 10. | நிதியும், நிதி முகாமைத்துவமும் | 14 |
| 11. | 2012 ஆம் ஆண்டுக்கான இறுதிக் கணக்குகள் | 15 |
| | i நிதி நிலைமை அறிக்கை | 16 |
| | ii நிதிச் செயல்திறன் அறிக்கை | 17 |
| | iii தேறிய சொத்துகள் / மூலதனமாற்றங்களுக்கான கூற்று | 18 |
| | iv காசுப் பாய்ச்சல் கூற்று | 19 |
| | v 2012 டிசெம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டின் கணக்குக் குறிப்புக்கள் | 20 |
| | vi 2012 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பொதுக் கணக்கீட்டுக் கொள்கைகள் | 24 |
| 12. | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை | 25 |

# 01. தலைவரின் செய்தி

நிலஅளவைச் சபை

நிலஅளவையாளா் நாயக அலுவலகம்

கிருல வீதி, நாரஹேன்பிட்ட

கொழும்பு – 05

01 மார்ச்சு 2012

நிலஅளவைச் சபை 2012 ஆண்டுக் காலப்பகுதியில் திருப்திகரமாக செயலாற்றியது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறேன்.

நிலஅளவசை் சபை உறுப்பினா்களாக நியமிக்கப்பட்டவா்களின் பதவிக் காலம் 2011.12.31 ஆம் திகதியுடன் முற்றுப்பெற்றதன் காரணமாக கௌரவ அமைச்சா் - காணி, காணி அபிவிருத்தி அமைச்சு அவா்களினால் புதிய உறுப்பினா்கள் மூன்று வருட காலத்திற்காக 2012 ஜனவரி 01 ஆம் திகதிமுதல் அமுலுக்குவரும் வகையில் நியமிக்கப்பட்டார்கள். மேலும் கணனி பிரயோக உதவியாளா், எழுதுவினைஞா் பதவியில் நிலவிய வெற்றிடமும் 2012 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் நிரப்பப்பட்டுள்ளது.

நில அளவைச் சபைக்கு இடவசதியுடன் கூடிய ஓா் அலுவலகக் கட்டிடத்தை ஸ்தாபித்துக்கொள்வதற்கு தேவையான காணித் துண்டை (07 பேர்ச்சஸ்) நிலஅளைவ தலைமைக் காரியாலயத்திற்குச் சொந்தமான காணியிலிருந்து வழங்குவதற்கு நில அளவையாளா் நாயகம் விருப்பம் தெரிவித்ததுடன் இதற்குத் தேவையான நடவடிக்கைகள் உரிய நிறுவனத்துடன் இணைந்து இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

2003 ஆம் ஆண்டு சபை ஆரம்பிக்கப்பட்ட பின்னா் சுமாா் 1320 நிலஅளவையாளா்கள் 2004 ஆம் ஆண்டு வருட இறுதியில் பதிவு செய்துள்ளதுடன் 2012 ஆம் ஆண்டு இறுதியின் போது இத்தொகை 1914 ஆக உயா்வு அடைந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும். மேலும் 2004 ஆம் ஆண்டுப்பகுதியில் 860 பதிவு செய்யப்பட்ட நிலஅளவையாளா்கள் வருடாந்த உத்தரவுப்பத்திரம் பெற்றுள்ளதுடன் 2012 ஆம் ஆண்டில் இத்தொகையானது 1145 ஆக உயா்வடைந்துள்ளது.

2012 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் கௌரவ அமைச்சரும் நிலஅளவைச் சபையும் அரசாங்க நிலஅளவையாளா்களுக்கு பிரத்தியேக அளவைக் கடமைகளில் ஈடுபடுவதற்கான அனுமதியினை வழங்கியமை குறிப்பிடத்தக்க விடயமாகும். இதற்கிணங்க விண்ணப்பித்தவா்களில் 44 அரசாங்க நிலஅளவையாளா்களுக்கு வருடாந்த உத்தரவுப் பத்திரம் வழங்கியுள்ளது. நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டதன் (வழக்கு இல 98/12 காரணமாக, கொழும்பு மாவட்ட நிதிமனறத்தின் கட்டளைப் பிரகாரம் விண்ணப்பித்த மிகுதி அரசாங்க நிலஅளவையாளா்களுக்கான உத்தரவுப் பத்திரம் வழங்கும் நடவடிக்கை தற்காலிகாக இடை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

வருடாந்த உத்தரவுப் பத்திரம் வழங்குவதற்கு மேலதிகமாக பதிவு செய்யப்பட்ட உத்தரவுப் பத்திரம் பெற்ற நிலஅளவையாளா்களினால் மேற்கொள்ளப்படும் உத்தியோக துஷ்பிரயோக நடத்தை தொடா்பாக முக்கிய கவனம் செலுத்தி வருகிறது. இதற்கினங்க 2012 ஆண்டு 11 ஆரம்பகட்ட விசாரணைகள் மூலமும் 07 முறையான விசாரணைகள் ஊடாகவும் சுமாா் 70 முறைப்பாடுகளுக்கு நிலஅளவைச் சபையினால் தீா்வினை எட்ட முடிந்துள்ளது.

நிலஅளவைச் சபை ஸ்தாபிக்கப்பட்ட நாளிலிருந்து பதிவு செய்யப்பட்ட நிலஅளவையாளா்கள் மத்தியில் சிறந்த ஒழுக்கவிழுமியங்களுடன் செயலாற்றும் பொருட்டு அதற்கான ஆற்றுப்படுத்தும் நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. 2012 ஆம் ஆண்டுடிலும் முதந்தடவையாக உத்தரவுப் பத்திரம் பெற்ற நிலஅளவையாளா்களுக்கு இவ் ஆற்றுப்படுத்தும் நிகழ்ச்சி தொடா்தோ்ச்சியாக இடம்பெற்மை குறிப்பிடதக்கதாகும். மேலும் பதிவு செய்யப்பட்ட நிலஅளவையாளா்களுக்கான தொடா்ச்சியான தொழில்சாா் மேம்பாட்டு பயிற்சி நெறியின் தேவையைக் கவனத்திற்கொண்டு நில அளவைச் சபை 2012 ஆம் ஆண்டு இவ்வாறான 06 பாடநெறிகளை (ஆற்றுப்படுத்தும் நிகழ்ச்சிகள் உள்ளடங்கலாக) வருடாந்த உத்தரவுப் பத்திரம் பெற்ற நிலஅளவையாளா்களுக்காக நடாத்த அனுமதி வழுங்கி இருந்நதது. மேலும் உள்ளூா் நிலஅளவையாளா்களின் சம்மேளனம் அவா்களது உறுப்பினா்களை தொடா்ச்சியான தொழில்சாா் மேம்பாட்டு பயிற்சி நெறிகளில் கலந்து பயன்பெறுவதற்கு ஆா்வம் ஊட்டியமை குறிப்பிடத்தக்கதொன்றாகும். பதிவு செய்யப்பட்ட நிலஅளவையாளா்கள் தொடா்ச்சியான தொழில்சாா் மேம்பாட்டு பயிற்சி பாடநெறி மற்றும் ஆற்றுப்படுத்தும நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்கு காட்டும் ஆா்வம் மிகப் பாராட்டுகுரியதாகும்.

நிலஅளவைச் சபை மீளாய்வு ஆண்டுக்காலப் பகுதியில் சிறப்பாகவும் திறம்படவும் சேவையாற்றுவதற்கு ஒத்தாசையாக இருந்த சபை உறுப்பினா்கள், பதில் செயலாளா் மற்றும் நிலஅளவைச் சபை அலுவலா்கள் ஆகிய அனைவருக்கும் எனது மனமாா்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்..

எஸ்.எம்.டபிள்யு. பா்னாந்து
தலைவா் / நிலஅளவைச் சபை

## 02. தொலைநோக்கும் செயற்பணியும்

### தொலைநோக்கு

"போட்டிமிக்க வர்த்தக உலகில் தரம் வாய்ந்ததும், தொழில் நிபுணத்துவமுடையதுமான அளவைச் சேவைகளில் கவனம் செலுத்துகின்ற தொழில் நிபுணத்துவமிக்க சூழலைப் பலப்படுத்துவதனூடாக நில அளவீட்டுக்கான ஒழுங்கு முறையான கட்டுமான முழுமை ஒன்றைப் பேணுவதன் மூலம் தேசிய அபிவிருத்திக்கான எமது பௌதீக இயற்கை வளங்களின் உச்சமட்ட நிலையான பயன்பாட்டினை உறுதிப்படுத்துவதே எமது தொலை நோக்காகும்."

### செயற்பணி

"அளவைத் தொழில் மற்றும் அதன் செயன்முறைகள் சிறப்பான முறையில் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன என்பதையும், அவை தொழிற்துறையில் எதிர்பார்க்கப்பட்ட தொழில்நுட்பத் தேவைப்பாடுகள் மற்றும் ஒழுக்க நியமங்களுக்கு ஏற்றவாறான கல்வி மற்றும் பயிற்சி என்பவற்றைப் பெற்று அவற்றைத் தொழிலில் பிரயோகிப்பதனூடாக அளவைத் தொழிலை மேற்கொள்பவர்கள் தொழல்சார் நடவடிக்கைகளில் உயர்தர நியமங்களைப் பேணுவதனையும் உறுதி செய்வதே எமது செயற்பணியாகும்."

## 03. 2002 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க நில அளவைச் சட்டத்தின் பிரிவு 37 இல் உள்ளவாறு நில அளவைச் சபையின் செயற்பாடுகள்

2002 ஆம் ஆண்டின் நில அளவைச் சட்டம் இல.17 இன் கீழ் நில அளவைச் சபையானது நில அளவையாளர் நாயக அலுவலகம் (முதலாம் மாடி), இல.150, கிருல வீதி, கொழும்புஉ5 இல் தாபிக்கப்பட்டது.

நில அளவைச் சட்டம் இல.17 பிரிவு 37 இல் கொடுக்கப்பட்டுள்ள நில அளவைச் சபையின் தொழிற்பாடுகள் பின்வருமாறு:உ

அ. காணி அளவை தொடர்பான நியமங்களையும், நடைமுறை விதிகளையும் பேணுவதுடன் காணி அளவைத் தொழிலை மேற்கொள்பவர்கள் மத்தியில் தொழில்சார் ஒழுக்காற்றையும் பேணுதல்.

ஆ. நிலஅளவையாளர்களிடமிருந்து அவர்களைப் பதிவு செய்யப்பட்ட நில அளவையாளர்களாகப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்களைப் பெறுவதுடன் அத்தகைய நில அளவையாளர்கள் விதிந்துரைக்கப்பட்ட தகைமைகளையும், அனுபவங்களையும் கொண்டுள்ளார்கள் என்றும், நிலஅளவைத் தொழிலில் ஈடுபடுவதற்கான ஆற்றல், அறிவு என்பவற்றைக் கொண்டுள்ளார்கள் என்றும் சபை திருப்தியடையும் இடத்து அவர்களுக்கான பதிவை மேற்கொள்ளுதல்.

இ. தொழிலில் ஈடுபடுவதற்கான வருடாந்த உத்தரவுப் பத்திரம் வழங்குவதற்காகப் பதிவு செய்யப்பட்ட நில அளவையாளர்களிடமிருந்து விண்ணப்பங்களைப் பெறுவதுடன் அத்தகைய நில அளவையாளர்கள் நில அளவைத் தொழிலில் ஈடுபடுவதற்கான அறிவு, ஆற்றல் என்பனவற்றைக் கொண்டுள்ளார்கள் என்று சபை திருப்தியடையும் பட்சத்தில் அவர்களுக்கு உத்தரவுப் பத்திரம் வழங்குதல்.

ஈ. நிலஅளவைத் தொழிலில் ஈடுபடும் நிலஅளவையாளர்கள் மத்தியில் உயர் தொழில்சார் கல்வித் தரங்கள் பேணப்படுவதை மேம்படுத்தல்.

உ. நிலஅளவைத் தொழிலில் ஈடுபடும் நில அளவையாளர்கள் மற்றும் வருடாந்த தொழில் புரியும் உத்தரவுப் பத்திரத்தைப் பெறுவதற்கு விண்ணப்பித்தவர்களின் அறிவு, ஆற்றல்களை விருத்தி செய்வதன் ஊடாக தொழில்சார் வளர்ச்சிக்காக வழங்கப்படும் நிகழ்ச்சித் திட்டங்களை அதிகரித்தல்.

ஊ. நிலஅளவைத் துறையில் கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளை அங்கீகரித்தல், செயன்முறை அனுபவத் தேவைப்பாடுகளை நிர்ணயம் செய்தல் மற்றும் நில அளவையாளர்களைப் பதிவு செய்வதற்காகவும், அவர்களுக்கு வருடாந்த தொழில் புரியும் உத்தரவுப் பத்திரம் வழங்குவதற்குமான தகைமைப் பரீட்சைகள் மற்றும் தொழில்சார் நேர்முகப் பரீட்சைகள் போன்றவற்றை நடத்துதல்.

எ. நில அளவைத் தொழிலில் ஈடுபடும் நில அளவையாளர்களின் கல்வி – பயிற்சி மற்றும் அங்கீகாரம் என்பவற்றில் சீரானதும் பரஸ்பரமானதொரு தன்மையை பேணும் நோக்கத்திற்காக வெளிநாடுகளில் உள்ள சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் இணைந்து பரஸ்பர ஏற்பாடுகளை மேற்கொள்ளுவதும், கலந்துரையாடல்களில் ஈடுபடுவதும்.

ஏ. அளவைத் துறையில் வேண்டப்பட்ட கல்வித் தரங்களைப் பேணும் நோக்குடன் இலங்கையில் காணி அளவை மற்றும் காணித் தகவல் தொடர்பான கல்வி, பயிற்சி நெறிகளை மேற்கொள்ளும் நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து செயற்படல்.

ஐ. அளவைத் துறையில் உயர் தொழில்சார் தரங்களைப் பேணும் நோக்குடன் இலங்கையின் ஏனைய தொடர்புடைய அமைப்புக்களுடன் ஒருங்கிணைந்து செயற்படல்.

## 04. நில அளவைச் சபையின் அதிகாரங்கள்.

அ. நிலஅளவைச் சபைக்கான ஏதேனும் அசைவுள்ள மற்றும் அசைவற்ற சொத்துக்களைக் கொள்வனவு செய்வதற்கு குத்தகை அல்லது வாடகை அடிப்படையில் அவற்றை பெறுவதற்கு அல்லது வழங்குவதற்கு, ஈடுவைப்பதற்கு, அடகு வைப்பதற்கு, விற்பனை செய்வதற்கு அல்லது அவற்றை வேறு ஏதேனும வகையில் அகற்றுவதற்கும்.

ஆ. சபையானது காசாகவோ அல்லது வேறு வகையிலோ வரப்பிரசாதங்கள், கொடைகள் அல்லது அன்பளிப்புக்கள் போன்றவற்றை ஏற்றுக்கொள்வதற்கும், தனது தொழிற்பாடுகளை மேற்கொள்வதற்காக அவற்றிற்கு விண்ணப்பிப்பதற்கும்;

இ. சபை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அவசியமாக இருக்கக் கூடியவாறான அலுவலா்களையும், ஊழியா்களையும் நியமனம் செய்வதற்கு

ஈ. அவ்வாறு நியமனம் செய்யப்பட்ட அலுவலா்களுக்கும், ஊழியா்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய சம்பள விபரங்களை தீா்மானிப்பதற்கும்.

உ. சபையின் செயற்பாடுகளை வினைத் திறமையுடன் நிறைவேற்றுவதற்கான செயற்குழுக்களை நியமித்தல்

ஊ. சபையின் அலுவலா்களுக்கும், ஊழியா்களுக்கும் சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை ஏற்படுத்துதல் மற்றும் சேமநலன்கள், பொழுது போக்கு வசதிகளை வழங்குதல்.

எ. சபையின் நிா்வாக நடவடிக்கைகள் தொடா்பான விதிப் பிரமாணங்களை நிா்ணயித்தல்.

ஏ. பொதுவாக சபையின் செயற்பாடுகளை நேர்த்தியாக மேற்கொள்வதற்கு ஏதுவாக அமையக் கூடிய அவ்வாறான ஏனைய அனைத்து விடயங்களையும் மேற்கொள்ளுதல்.

## 05. 2012 ஆம் ஆண்டுக் காலப்பகுதிக்கான நில அளவைச் சபையின் செயலாற்று அறிக்கை

**2012 டிசம்பர் 31 இல் உள்ளவாறு நிலஅளவைச் சபையின்  உறுப்பினர்கள் வருமாறு**

| | | |
|---|---|---|
| 1. | திரு. எஸ்.எம்.டபிள்ய‘. ப்ர்னாந்து | உ தலைவர் |
| 2. | கலாநிதி கே. தவலிங்கம் | உ உபதலைவர் |
| 3. | திரு..டபிள்ய‘.ஏ.எஸ்.விக்கிரமாராச்சி | உ உறுப்பினர் |
| 4. | கலாநிதி. கே.ஆர்.எம்.யு. பண்டார | உ உறுப்பினர் |
| 5. | திரு. சீ. டீ எஸ். குணதிலக | உ உறுப்பினர் |
| 6. | திரு. ஜெரால்ட் ஏ. டீ சில்வா | உ உறுப்பினர் |
| 7. | திரு. கே.ஏ.எம். டீ அல்விஸ் | உ உறுப்பினர் |
| 8. | செல்வி திமாலி டீ சில்வா | உ கண்காணிப்பாளர்/ திறைசேரியின் பிரதிநிதி |

**மீளாய்வு ஆண்டுக்காலப் பகுதியில் சபை உறுப்பினர்கள் வருமாறு:**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | திரு. எஸ்.எம்.டபிள்ய‘. ப்ர்னாந்து | தலைவர் | உ 04.02.2009 | உ இன்று வரை |
| 2. | கலாநிதி. கே. தவலிங்கம் | உபதலைவர் | உ 04.02.2009 | உ இன்று வரை |
| 3. | திரு. டபிள்ய‘.ஏ.எஸ்.விக்கிரமாராச்சி | உறுப்பினர் | உ 19.07.2011 | உ இன்று வரை |
| 4. | கலாநிதி. கே.ஆர்.எம்.யு. பண்டார | உறுப்பினர் | உ 01.01.2012 | உ இன்று வரை |
| 5. | திரு. திரு. சீ. டீ எஸ். குணதிலக | உறுப்பினர் | உ 01.01.2012 | உ இன்று வரை |
| 6. | திரு. ஜெரால்ட் ஏ. டீ சில்வா | உறுப்பினர் | உ 01.01.2012 | உ இன்று வரை |
| 7. | திரு. கே.ஏ.எம். டீ அல்விஸ் | உறுப்பினர் | உ 01.01.2012 | உ இன்று வரை |
| 8. | செல்வி திமாலி டீ சில்வா | திறைசேரியின் பிரதிநிதி | உ 27.09.2010 | உ இன்று வரை |

**சபையின் கூட்டங்களில் பங்குபற்றிய உறுப்பினர்களின் வருகை பின்வருமாறு காணப்பட்டது.**

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. எஸ்.எம்.டபிள்ய‘. ப்ர்னாந்து | உ தலைவர் | 14 கூட்டங்கள் |
| 2. | கலாநிதி. கே. தவலிங்கம் | உ உபதலைவர் | 14 கூட்டங்கள் |
| 3. | திரு..டபிள்ய‘.ஏ.எஸ்.விக்கிரமாராச்சி | உ உறுப்பினர் | 14 கூட்டங்கள் |
| 4. | கலாநிதி. கே.ஆர்.எம்.யு. பண்டார | உ உறுப்பினர் | 10 கூட்டங்கள் |
| 5. | திரு. திரு. சீ. டீ எஸ். குணதிலக | உ உறுப்பினர் | 14 கூட்டங்கள் |
| 6. | திரு. ஜெரால்ட் ஏ டீ சில்வா | உ உறுப்பினர் | 13 கூட்டங்கள் |
| 7. | திரு. கே.ஏ.எம். டீ அல்விஸ் | உ உறுப்பினர் | 14 கூட்டங்கள் |
| 8. | செல்வி. திமாலி டீ சில்வா | திறைசேரியின் பிரதிநிதி | 12 கூட்டங்கள் |

## 06 சபை அலுவலகர்கள்

1. திரு. ஜி.டி.எஸ்.கே. குணரட்ன
   பதில் செயலாளர் — 01.01.2009 முதல் இன்று வரை

2 திரு. ரஞ்சித் மஹகும்புர
   கணக்காளர் (பகுதி நேர அடிப்படையில்) — 01.03.2008 முதல் இன்று வரை

3 செல்வி டபிள்யு'.ஏ.எஸ். பிரியதர்சினி
   கணனிப் பிரயோக உதவியாளரும்,
   எழுதுநரும் — 24.05.2004 முதல் இன்று வரை

4. திரு. பி.சி. லியனகே
   கணனிப் பிரயோக உதவியாளரும்,
   எழுதுநரும் — 16.03.2012 முதல் 28.02.2012 வரை

5 திரு. ரி.ஜி. பர்னாந்து
   அலுவலக சேவகர் — 15.07.2004 முதல் இன்று வரை

# 07 செயற்பாடுகள்

## பதிவு செய்தல்

மீளாய்வு ஆண்டுக் காலப்பகுதியில் 55 புதிய நில அளவையாளர்கள் பதிவு செய்துள்ளதுடன் 31.12.2012 இல் உள்ளவாறு பதிவு செய்யப்பட்ட நில அளவையாளர்களின் மொத்த எண்ணிக்கை 1914 ஆகக் காணப்பட்டது. இந்த நில அளவையாளர்களுக்கு பதிவுச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டுள்ளது.

## வருடாந்த தொழில் புரியும் உத்தரவுப் பத்திரம்


மீளாய்வு ஆண்டுக் காலப்பகுதியில் 1145 பதிவு செய்யப்பட்ட நில அளவையாளர்கள் வருடாந்த தொழில் புரியும் உத்தரவுப் பத்திரத்தினைப் பெற்றுக்கொண்டார்கள். (அரச சார்பற்ற நிலஅளவையாளர்கள் 1101 அரசாங்க நிலஅளவையாளர்கள் 44)

2012 மார்ச்சு 13 ஆம் திகதி வரை வருடாந்த உத்தரவுப்பத்திரம் பெற்ற நில அளவையாளர்களின் முதலெழுத்துக்களுடனான பெயர்கள், பதிவு இலக்கங்கள், மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கங்கள் அடங்கிய விபரங்கள் 2012 ஏப்ரல், 05 ஆம் திகதிய 1783 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

உத்தரவுப் பத்திரம் பெற்ற சகல நில அளவையாளர்களினதும் பதிவு இலக்கங்கள், முதலெழுத்துக்களுடன் கூடிய பெயர்கள், முழுப் பெயர்கள், தேசிய அடையாள அட்டை இலக்கங்கள் மாவட்டத்தின் பெயர், முகவரிகள், தொலைபேசி இலக்கங்கள், வருடாந்த உத்தரவுப்பத்திரங்களின் எண்ணிக்கை மற்றும் உத்தரவுப்பத்திரம் காலவதியாகும் காலம் போன்ற தகவல்கள் உள்ளடங்கிய விபரங்கள் www.survey.gov.lk என்ற இணையத்தள முகவரியில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. இத்தகவல்கள் ஒவ்வொரு மூன்று மாத காலத்திற்கு ஒருமுறை நாளதுவரைவுபடுத்தப்படும்..

2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுக் காலப்பகுதிகளில் வழங்கப்பட்ட உத்தரவுப் பத்திரங்களின் மொத்த எண்ணிக்கை.

**2011, 2012 இல் வழங்கப்பட்ட மொத்த உத்தரவுப் பத்திரம்**




## பொது மக்களுக்கான தகவல்

நிலஅளவைச் சபையினால் வழங்கப்பட்ட சேவையை அறிந்த பொது மக்கள் தொடர்ச்சியாகவும் மறைந்த அல்லது உயிருடன் இருக்கும் பதிவு செய்யப்பட்ட நில அளவையாளர்கள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கும், மேலும் உத்தரவுப்பத்திரம் பெற்ற நில அளவையாளர்களினால் தயாரிக்கப்பட்ட சுமார் 100 வருடங்களுக்கும் மேல் பழைமைவாய்ந்த மூலக் கிடைப்படங்களின் பிரதிகளை பெற்றுக்கொள்வதற்கும் நில அளவைச் சபையின் உதவியினை நாடிநிற்கின்றார்கள். இவ்வாறான தகவல்களை உடனடியாக வழங்கும் எண்ணத்துடன் சொந்த முகவரிகள், பதிவு இலக்கங்கள் மேலும் உத்தரவுப் பத்திரம் நிலஅளவையாளர்களின் உத்தரவுப் பத்திர இலக்கங்கள் போன்ற தகவல்களை சேகரிப்பதற்கான ஒரு தரவுத்தளத்தை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 2004 ஆம் ஆண்டிற்கு முன்னர் பதிவு செய்த உத்தரவுப் பத்திரம் பெற்ற நிலஅளவையாளர்களினால் தயாரிக்கப்பட்ட மூலக் கிடைப்படங்களின் பிரதிகளை பெற்றுக்கொள்வதற்கு உதவியாக அமையும் பொருட்டு அவர்களது தொடர்பு (தொலைபேசி) இலக்கங்களையும் தரவுத்தளத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. இது பொதுமக்களுக்கு உரிய நபர்களை தொடர்புகொள்வதற்கு வழிவகுக்கும். ஆயினும், நில அளவைச் சபையானது இவ்வாறன சேவைகளையிட்டு ப'ரண திருப்தி கொள்ளவில்லை. ஏனெனில், இது பொதுமக்களுக்கு ஒழுங்கான முறையில் பழைமை வாய்ந்த கிடைப்படங்களை பெற்றுக்கொள்வற்கு முழுமையாக உதவவில்லை. குறித்த மீளாய்வு ஆண்டுக் காலப் பகுதியில் இவ்வாறான 234 விசாரணைகள் காணப்பட்டன.

## நில அளவைச் சபையினால் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட முறைப்பாடுகள்.

பெறப்பட்ட முறைப்பாடுகளின் மொத்த எண்ணிக்கை

2011, 2012 இல் பெறப்பட்ட முறைப்பாடுகள்




2012 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் தொழில் புரியும் உத்தரவுப் பத்திரம் பெற்ற நில அளவையாளர்களினால் மேற்கொள்ளப்பட்ட உத்தியோக துர்நடத்தை தொடர்பாக மொத்தம் 79 முறைப்பாடுகள் பொது மக்களிடமிருந்து கிடைக்கப்பெற்றன. நில அளவைச் சபை 11 ஆரம்ப கட்ட விசாரணைகளை மேற்கொண்டது. மேலும் அவசியமான சந்தர்ப்பங்களின் போதும் முறையான விசாரணைகளை மேற்கொண்டது. குறித்த மீளாய்வு ஆண்டுக் காலப்பகுதியில் 07 முறையான விசாரணைகளை மேற்கொண்டது. 2012 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் நில அளவைச் சபையினால் இவ்வாறான 70 முறைப்பாடுகளுக்கு தீர்வினை வழங்கக் கூடியதாக இருந்தது. மேலும் ஆண்டு இறுதியில் 18 முறைப்பாடுகள் மாத்திரமே தீர்த்து வைக்கப்படாமல் நிலுவையாக இருந்தன.

முறைப்பாடுகள் தொடர்பாக முறையீட்டாளர்கள் ஆர்வம் காட்டாத சந்தர்ப்பங்களில் அந்த முறைப்பாடு தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்வது நிறுத்தப்படும் என அறிவிக்கப்பட்டு, இவ்வாறன 02 முறைப்பாடுகள் முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

முறையீட்டளர்கள் தரப்பினால் முன்வைக்கப்பட்ட முறைப்பாடுகளுக்கு 2002 ஆம் ஆண்டு 17 ஆம் இலக்க நிலஅளவைச் சட்ட ஒழுக்கிற்கமைய நிலஅளவைச் சபைக்கு தாக்கல் செய்யப்பட்ட 06 முறைப்பாடுகள் சபையின் அதிகார வரம்பிற்கு உட்படாததன் காரணமாக எவ்வித நடவடிக்கையும் எடுக்க முடியாது என அறிவித்ததுடன் இது போனற் இன்னும் ஒரு முறைப்பாடு நிலஅளவையாளர் நாயகம் அவர்களிடமும் தாகக்கல் செய்யப்பட்டருந்தது.

நீதிமன்றக கட்டளைப் பிரகாரம் கௌரவ நீதி மன்றில் பதிவுசெய்யப்பட்ட நீதிமன்ற ஆனைக்குழுவில் அளவைக் கடமை புரிபவர் தொடர்பான முறைப்பாடுகளில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட முறைப்பாடுகள் 04 கௌரவ நீதிமன்றத்தினால் பரீட்சிப்பதற்கு தயார் நிலையில் உள்ள வழக்கு தொடர்பாகவோ, பரீட்சிக்கப்டும் வழக்கு தொடர்பாகவோ, பரீட்சிக்கப்பட்டு கிடைக்கப்பெற்ற தீர்வு தொடர்பாகவோ நிலஅளவைச் சபையினால் எவ்வித நடவடிக்கைளிலும் ஈடுபட முடியாது என அறிவிக்கப்பட்ட 13 முறைப்பாடுகள முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

## 08 கல்வியும் பயிற்சியும்

### தொடர்ச்சியான தொழில்சார் மேம்பாட்டு பயிற்சி நெறிகள். (CPD)

நில அளவையில் முக்கியமானதொரு திருப்புமுனையாக தொடர்ச்சியான தொழில்சார் மேம்பாட்டு பயிற்சி நெறிகள் திகழ்கின்றன. இதனை அவதானித்த நில அளவைச் சபையானது நிலஅளவையில் தொழில் நிபுணத்துவம் பெற்றவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய தொழில்நுட்பத்தினை தற்போதைய அபிவிருத்திக்கு நில அளவைக் களத்தில் பயன்படுத்துவது தொடர்பான பயிற்சிப் பாடநெறிகளை / செயலமர்வுகளில் பதிவு செய்யப்பட்ட உத்தரவுப்பத்திரம் பெற்ற நில அளவையாளர்கள் பங்குபற்றுவதற்கு ஆர்வமூட்டியது.

நில அளவைச் சபை முதற் தடவையாக ஆரம்பித்த தொலைக் கல்வி நிகழ்ச்சிச் திட்டத்தினை **(DEP)** 2009 இல் நடாத்தியது போன்று 2010 இலும் இத் தொலைக்கல்வி நிகழ்ச்சித் திட்டத்தினை **(DEP)** தொடர்ந்தும் நடாத்தியதுடன் மேலும். நில அளவைச் சபை இலங்கை நில அளலையாளர் நிறுவனத்தின் ஊடாக உத்தரவுப் பத்திரம் பெற்ற நில அளவையாளர்களை ஆர்வமூட்டியது. மேலும் தொலைக் கல்வித் திட்டத்தின் **(DEP)** கீழ் அறிமுகப்படுபத்தப்பட்ட தொழில்சார் பயிற்சி – I மற்றும் தொழில்சார் பயிற்சி – II ஆகிய முதலிரு பாடநெறிகளில் இலங்கை நிலஅளவையாளர் நிறுவன உறுப்பினர்களும் மற்றும் ஏனைய உத்தரவுப் பத்திரம் பெற்ற நில அளவையாளர்களும் கலந்து கொண்டார்கள். இந்தப் பாடநெறிகளில் பங்குபற்றியவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. எனினும் 2012 ஆண்டுப் பகுதியில் எதுவித தொலைக் கல்வி நிகழ்ச்சிகளும் இடம்பெறவில்லை.

### இலங்கை நில அளவைத் திணைக்களம் மற்றும் மாவட்ட உத்தரவுப் பத்திரம் பெற்ற நில அளவையாளர்கள் சம்மேளனம் ஆகியவற்றால் நடாத்தப்பட்ட தொடர்ச்சியான தொழில்சார் மேம்பாட்டு பயிற்சி நெறி (CPD)

நிலஅளவைச் சபையின் வழிகாட்டலின் கீழ் தொடர்ச்சியான தொழில்சார் மேம்பாட்டு பயிற்சி நெறியினை பதிவு செய்யப்பட்ட நில அளவையாளர்கள், பதிவு செய்யப்பட்ட உத்தரவுப் பத்திரம் பெற்ற நில அளவையாளர்கள் ஆகியோருக்கு நடாத்துவதற்கு நில அளவைத் திணைக்களம் மற்றும் மாவட்ட உத்தரவுப் பத்திரம் பெற்ற நில அளவையாளர்கள் சம்மேளனம் (கொழும்பு மற்றும் கம்பஹா) ஆகிய நிறுவனங்கள் காட்டிய அதிக ஆர்வத்தினை நில அளவைச் சபையானது திருப்தியுடன் சுட்டிக் காட்டுவதோடு அப் பயிற்சி நெறிகள் நில அளவைச் சபையால் தொடர்ச்சியான தொழில்சார் மேம்பாட்டு பயிற்சி நெறிகளாக ஏற்கப்பட்டது.

### முதல் முறையாக உத்தரவுப் பத்திரம் பெற்றுக்கொண்டவர்களுக்கான செயலமர்வு (ஆற்றுப்படுத்தும் செயலமர்வு)

சென்ற ஆண்டு இடம்பெற்றது போன்று, நில அளவைச் சபை 2012 ஆம் ஆண்டு இன்னுமொரு செயலமர்வு ஒன்றினை ஆரம்பித்தது. இச்செயலமர்வு நிலஅளவைச் சபையின் ஆயுதமான வருடாந்த உத்தரவுப் பத்திரத்தினை முதன் முறையாகப் பெற்ற நிலஅளவையாளர்கள் நலன் கருதியும் தமது தொழிலை நில அளவைத்துறையில் திறம்பட முன்னெடுத்துச் செல்லும் பொருட்டும் ஆரம்பித்தது. அதிக அனுபவமிக்கவர்களும், உண்மையான திறமையுள்ள தேர்ச்சிமிக்க பதிவு செய்யப்பட்ட நில அளவையாளர்களில் இருந்து பதிவு செய்யப்பட்ட நில அளவையாளர்களுக்கு போதிப்பதற்காக தேர்ந்தேடுக்கப்பட்டுள்ளார்கள்.


**நடாத்தப்பட்ட தொடர்ச்சியான தொழில்சார் மேம்பாட்டு பயிற்சி நெறியின் சுருக்கம்.**

| | **நிறுவனத்தின் பெயர்** | **தொடர்ச்சியான தொழில்சார் மேம்பாட்டு (CPD) பயிற்சி நெறியின் பெயர்** | **பயிற்சி நெறிகள் நடாத்தப்பட்ட திகதி** |
|---|---|---|---|
| 01 | இலங்கை நில அளவைத் திணைக்களம் | தொழில் நுட்ப அமர்வுகள் | 2012.04.12 |
| 02 | கம்பஹா மாவட்ட உ.ப.பெற்ற நிலஅளவையாளர் சம்மேளம் | விலைமதிப்பீட்டில் விழிப்புணர்வு‘ட்டல் நிகழ்ச்சித் திட்டம் | 2012.06.29 |
| 03 | கம்பஹா மாவட்ட உ.ப.பெற்ற நிலஅளவையாளர் சம்மேளம் | கூட்டாட்சி உரிமைக் கிடைப்படம் தொடர்பான அமர்வுகள் | 2012.07.14 |
| 04 | கொழும்பு மாவட்ட உ.ப.பெற்ற நிலஅளவையாளர் சம்மேளம் | கூட்டாட்சி உரிமைக் கிடைப்படம் மற்றும் நீதி மன்ற ஆனைக்குழு அளவை தொடர்பான அமர்வுகள் | 2012.07.14 |
| 05 | நிலஅளவைச் சபை **(LSC)** | தொழில் நோக்குநிலைப் பயிற்சி | 2012.07.16 |
| 06 | நிலஅளவைச் சபை **(LSC)** | தொழில் நுட்ப அமர்வுகள | 2012.09.16 |

## 09 நிதி நடவடிக்கை பற்றிய மீளாய்வு

2011 – 2012 ஆம் ஆண்டு காலப்பகுதிக்கான வருமானம்

மொத்தவருமானம் 2011 உ 2012




படம் உ 2010 – 2011

குறித்த ஆன்டுக் காலப்பகுதியில் நிலஅளவைச் சபையின் மொத்த வருமானம் முன்னைய வருடத்திற்கான வருமானம் ரூபா 3,658,303.00 உடன் ஒப்பிடும் போது ரூபா 4,660,100.00 தொகையிடப்பட்டுள்ளது. இதனை மேலே உள்ள வரைவு காட்டுகிறது.

குறித்த ஆண்டுக் காலப்பகுதியில் சபையின் செலவினம் ரூபா 3,230,527.00 குறைவாகப் பதிவாகி ரூபா 1,429,573.00 ஆகத் தொகையிடப்பட்டுள்ளது.

2012 ஆம் ஆண்டிலும் 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளைப் போல் திறைசேரியினால் எவ்விதமான நிதிகளும் வழங்கப்படவில்லை. மேலும் 2012 ஆம் ஆண்டில் மூலதனச் செலவினம் ரூபா 85,.000 ஆகவிருந்தது.

## 10. நிதிகளும் நிதி முகாமைத்துவம்

நில அளவைச் சபையின் வருமானம் பிரதானமாகப் பதிவு செய்யப்பட்ட உத்தரவுப் பத்திரம் பெற்ற நிலஅளவையாளர்களிடமிருந்து அவர்களுக்கான உத்தரவுப் பத்திரம் வழங்குவதற்காக பெறப்பட்ட கட்டணம், தொடர்ச்சியான தொழில்சார் மேம்பாட்டு பயிற்சி நெறிகள் மற்றும் முறையான விசாரனைகளுக்கான செலவினம் தவறிழைத்த பதிவு செய்யப்பட்ட நிலஅளவையாளர்களிடம் செலுத்துமாறு வற்புறுத்தல் என்பனவற்றினால் பெறப்பட்டது.

2012.12.31 இல் உள்ளவாறு ரூபா 8,967,376.00 தொகை இலங்கை வங்கியின் நிலையான வைப்புக்களில் உள்ளன.

**11**

# 2012 ஆம் ஆண்டுக்கான இறுதிக் கணக்குகள்

## காணி, காணி அபிவிருத்தி அமைச்சு
## நில அளவைச் சபை

### 31, டிசம்பர் 2012 இல் உள்ளவாறான
### நிதி நிலைமை அறிக்கை

| விபரங்கள் | குறிப்பு | 2012 | | 2011 | |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| **சொத்துக்கள்** | | | | | |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | | | |
| காசும் காசுக்கு சமனானவையும் | 1 | 7,789,377 | | 6,215,149 | |
| கிடைக்கவேண்டியவை | 2 | 101,363 | | 166,517 | |
| இடர்கடன் | | 395,051 | | 262,120 | |
| விழா முற்பணம | | 2,000 | 8,287,791 | 2,000 | 6,645,786 |
| **நடைமுறைச் சொத்துக்கள் அல்லாதவை** | | | | | |
| நிலையான வைப்பு | 3 | 1,177,999 | | 1,293,728 | |
| சாதனங்களும் உபகரங்களும | 4 | 412,861 | 1,590,860 | 417,894 | 1,711,622 |
| மொத்தச் சொத்துக்கள் | | | 9,878,651 | | 8,357,408 |
| **பொறுப்புகள்** | | | | | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | | | |
| கிடைக்கப்பெற்ற உத்தரவுப்பத்திர முற்பணம் | | 2,541,650 | | 2,593,430 | |
| செலுத்தவேண்டியவை | 5 | 250,250 | | 204,000 | |
| அட்டுறுச் செலவு | 6 | 295,703 | 3,087,603 | 172,743 | 2,970,173 |
| **நடைமுறைப் பொறுப்புக்கள் அல்லாதவை** | | | - | | - |
| மொத்தப் பொறுப்புக்கள் | | | 3,087,603 | | 2,970,173 |
| நிகர சொத்துகள் மதிப்பு | | | 6,791,048 | | 5,387,235 |
| - | | | | | |
| **நிகர சொத்துகள் / மூலதனம்** | | | | | |
| <u>மூலதன பங்களிப்பு</u> | | | | | |
| பொது திறைசேரி | | 1,043,030 | | 1,043,030 | |
| திரண்ட நிதி | 7 | 4,318,445 | | 3,293,408 | |
| மிகையும் / குறையும் | | 1,429,573 | | 1,050,797 | |
| **மொத்த நிகர சொத்துகள் / மூலதனம** | | | 6,791,048 | | 5,387,235 |

| | |
|---|---|
| கே. தவலிங்கம் | எஸ்.எம்.டபிள்ய‘. பா்னாந்து |
| உபதலைவா் | தலைவா் |
| நில அளவைச் சபை | நில அளவைச் சபை |

# காணி, காணி அபிவிருத்தி அமைச்சு
# நில அளவைச் சபை

## 31, டிசம்பர் 2012 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிச் செயல்திறன் அறிக்கை

| விபரங்கள் | குறிப்பு | 2012 | | 2011 | |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா. |
| **வருமானம்** | | | | | |
| உத்தரவுப் பத்திரக் கட்டணம் | | 3,314,530 | | 2,762,500 | |
| பதிவுக் கட்டணம் | | 199,500 | | 3,500 | |
| ஏனைய வருமானம் | 8 | 1,146,070 | | 892,303 | |
| மொத்த வருமானம் | | | 4,660,100 | | 3,658,303 |
| **செலவினங்கள்** | | | | | |
| **ஊழியர் சம்பளங்கள்** | | | | | |
| சம்பளங்களும் கூலிகளும் | 9 | 802,122 | | 637,839 | |
| மேலதிக நேரம், விடுமுறைக் கொடுப்பனவுகள் | | - | | 33,300 | |
| ஏனைய படிகள் | 10 | 1,003,329 | (1,805,451) | 664,777 | (1,335,916) |
| **பிரயாணச் செலவினங்கள்** | | | | | |
| உள்ளூர் பிரயாணம் | | | (8.532) | | (16,533) |
| **விநியோகங்கள்** | | | | | |
| காகிதாதிகளும் அலுவலக உபகரணங்களும் | | 131,364 | | 107,504 | |
| ஏனையவைகள் | 11 | 41,119 | (172,483) | 42,494 | (149,998) |
| **பராமரிப்புச் செலவினங்கள்** | | | | | |
| இயந்திர சாதணங்களும் உபகரணங்களும் | | | (9,500) | | (17,288) |
| **சேவைகள்** | | | | | |
| தபாலும், தொடர்பாடலும் | | 108,976 | | 154,880 | |
| மின்சாரமும் தண்ணீரும் | 12 | 78,734 | | 78,734 | |
| ஏனையவைகள் | 13 | 956,818 | (1,144,528) | 769,232 | (1,002,846) |
| தேய்மானம் | | | (90,033) | | (84,925) |
| மொத்தச் செலவினங்கள் | | | (3,230,527) | | (2,607,506) |
| இக் காலத்திற்கான மிகையும் / குறையும் | | | **1,429,573** | | **1,050,797** |

| | |
|---|---|
| கே. தவலிங்கம் | எஸ்.எம்.டபிள்ய'. ப்ர்னாந்து |
| உபதலைவர் | தலைவா |
| நில அளவைச் சபை | நில அளவைச் சபை |

**காணி, காணி அபிவிருத்தி அமைச்சு**
**நில அளவைச் சபை**

**31, டிசம்பர் 2011 இல் முடிவடைந்த ஆண்டுக்கான தேறிய சொத்துகள் / மூலதனமாற்றங்களுக்கான கூற்று**

| விபரம் | மூலதன அளிப்பு | திரண்ட நிதி மிகையும் / குறையும் | மொத்தம் |
|---|---|---|---|
| 31 டிசம்பர் 2010 இல் மீதி | 1,043,030 | 4,318,445 | 5,361,475 |
| காலத்திற்கான மிகையும் / (குறையும்) | | 1,429,573 | 1,429,573 |
| 31, டிசம்பர் 2011 இல் உள்ள மீதி | 1,043,030 | 5,748,018 | 6,791,048 |

## காணி, காணி அபிவிருத்தி அமைச்சு
## நில அளவைச் சபை

### 31, டிசம்பர் 2011 இல் முடிவடைந்த ஆண்டுக்கான
### காசுப் பாய்ச்சல் கூற்று

| விபரங்கள் | குறிப்பு | 2012 | | 2011 | |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| **செயற்பாட்டு நடவடிக்கையிலான காசுப் பாய்ச்சல்** | | | | | |
| மிகையும் (குறையும்) | | 1,429,573 | | 1,050,797 | |
| **காசு அல்லாத நடவடிக்கைகள்** | | | | | |
| தேய்மானம் | | 90,033 | | 84,925 | |
| நிலையான வைப்பு வட்டி | | (732,907) | | (391,289) | |
| இடர்க் கடன் கொடுப்பனவில் (அதிகரிப்பு) / குறைவு | | (132,931) | | 66,180 | |
| கிடைக்கவேண்டியவை (அதிகரிப்பு) / குறைவு | | 65,154 | | (157,779) | |
| செலுத்தவேண்டியவை (அதிகரிப்பு) / குறைவு | | 46,250 | | (46,500) | |
| முற்பணமாகக் கிடைக்கப்பெற்ற உத்தரவுப் பத்திரக் கட்டணத்தின் அதிகரிப்பு / (குறைவு) | | (51,780) | | 100,030 | |
| திட்டமான செலவீனங்கள் அதிகரிப்பு / (குறைவு) | | 122,960 | | 77,765 | |
| தொங்கல் கணக்கு அதிகரிப்பு / (குறைவு) | | - | | (5,850) | |
| தேறிய செயற்பாட்டு நடவடிக்கையிலான காசுப் பாய்ச்சால் கூற்று | | | 836,352 | | 778,279 |
| **முதலீட்டு நடவடிக்கையிலான காசுப் பாய்ச்சல் கூற்று** | | | | | |
| நிலையான வைப்பு | | 115,729 | | 4,387,303 | |
| நிலையான வைப்பு வட்டி | | 732,907 | | 391,289 | |
| நிலையான சொத்துக் கொள்வனவு | | (85,000) | | (259,690) | |
| தேறிய முதலீட்டு நடவடிக்கையிலான காசுப் பாய்ச்சல் கூற்று | | | 763,636 | | 4,518,902 |
| **நிதியீட்ட நடவடிக்கையிலான காசுப் பாய்ச்சல் கூற்று** | | | | | |
| திரண்ட நிதி | | | (25,760) | | - |
| காசு மற்றும் காசிற்கு சமமானவற்றின் நிகர அதிகரிப்பு | | | 1,574,228 | | 5,297,181 |
| ஆரம்ப தவனையில் காசு மற்றும் காசிற்கு சமமானவற்றின் அதிகரிப்பு | | | 6,215,149 | | 917,968 |
| இறுதித் தவனையில் காசு, காசிற்கு சமமானவற்றின் அதிகரிப்பு | 1 | | 7,789,377 | | 6,215,149 |

கே. தவலிங்கம்
உபதலைவர்
நில அளவைச் சபை

எஸ்.எம்.டபிள்ய‘. பெர்னாந்து
தலைவர்
நில அளவைச் சபை

31 டிசம்பர் 2012 இல் முடிவடைந்த ஆண்டுக்கான கணக்றிக்கைக் குறிப்புக்கள்.

## காணி, காணி அபிவிருத்தி அமைச்சு
## நில அளவைச் சபை

**1 காசு மற்றும் காசிற்கு சமமானவை**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | கையிருப்பில் உள்ள காசு | | | | 3,455 |
| | வங்கியில் உள்ள காசு | | | | 143,253 |
| **நிலையான வைப்பு** | | | | | |
| தொடர் இல. | வங்கி | காலம் | கணக்கு இல. | பெறுமதி | |
| 1 | இலங்கை வங்கி – நாராஹேன்பிட்ட | 3 மாதம் | 7256887 | 2,000,000 | |
| 2 | இலங்கை வங்கி – நாராஹேன்பிட்ட | 1 மாதம் | 8737776 | 684,418 | |
| 3 | இலங்கை வங்கி – நாராஹேன்பிட்ட | 3 மாதம் | 70070797 | 1,842,855 | |
| 4 | இலங்கை வங்கி – நாராஹேன்பிட்ட | 3 மாதம் | 71352557 | 115,396 | |
| 5 | இலங்கை வங்கி – நாராஹேன்பிட்ட | 3 மாதம் | 72854722 | 1,000,000 | |
| 6 | இலங்கை வங்கி – நாராஹேன்பிட்ட | 3 மாதம் | 74176142 | 1,500,000 | |
| 7 | இலங்கை வங்கி – நாராஹேன்பிட்ட | 3 மாதம் | 74176180 | 500,000 | 7,642,669 |
| | | | | | 7,789,377 |

**2 கிடைக்க வேண்டியவை**

| | |
|---|---|
| கிடைக்க வேண்டியவ ட்டி வருமாணம் | 101,363 |
| | 101,363 |

**3 நிலையான வைப்பு**

| தொடர் இல. | வங்கி | கணக்கு இல. | பெறுமதி |
|---|---|---|---|
| 1 | இலங்கை வங்கி – நாராஹேன்பிட்ட | 71352120 | 1,177,999 |
| | | | 1,177,999 |

**காணி, காணி அபிவிருத்தி அமைச்சு**
**நில அளவைச் சபை**

4. இயந்திர சாதனங்களும் உபகரணங்களும்

| பொருட்கள் | 01.01.2012 இல உள்ளவாறான மீதி ரூபா | இவ்வாண்டுக் காலப்பகுதியிலான கொள்வனவு ரூபா | மொத்தம் ரூபா | தேய்மானம் % | வருடாந்த தேய்மானம் ரூபா | 2012-12-31 இல் உள்ளவாறான தேறிய பெறுமதி |
|---|---|---|---|---|---|---|
| இயந்திர சாதனங்கள் | 161,811 | - | 161,811 | 20 | 32,362 | ***129,449*** |
| தளபாடங்கள் | 184,001 | - | 184,001 | 10 | 18,400 | ***165,601*** |
| கணனி | 57,452 | 85,000 | 142,452 | 25 | 35,613 | ***106,839*** |
| அலுவலக உபகரணங்கள் | 14,630 | - | 14,630 | 25 | 3,658 | ***10,972*** |
| **மொத்தம்** | **417,894** | **85,000** | **502,894** | | **90,033** | **412,861** |

**5 செலுத்த வேண்டியவை**

| | |
|---|---|
| செலுத்த வேண்டிய முத்திரைச் செலவு | 250,250 |
| | 250,250 |

**6 அட்டுறுச் செலவினங்கள்**

| தொடர் இல. | செலவினங்கள் | ரூபா |
|---|---|---|
| 1 | சம்பளங்களும் கூலிகளும | 16,000 |
| 2 | தொலைபேசி | 2,248 |
| 3 | பயிற்சிப் பட்டறை செலவினம் | 7,000 |
| 4 | அலுவலர் பிரயாணம் | 455 |
| 5 | கணக்காய்வுக் கட்டணம் | 270,000 |
| **மொதத்தம்** | | **295,703** |

**7 திரண்ட நிதி**

| | |
|---|---|
| திரண்ட நிதி | 4,344,205 |
| திருத்திய வட்டித் தொகை | (25,760) |
| | **4,318,445** |

**8 ஏனைய வருமானம்**

| | |
|---|---|
| நானாவிதம் | 399,652 |
| நிலையான வைப்பு வட்டி | 732,907 |
| கடனுக்கான வட்டி | 13,511 |
| | **1,146,070** |

**9 சம்பளமும் கூலியும**

| | |
|---|---|
| சம்பளமும் கூலியும் | 679,591 |
| ஊ.நே.நிதி பங்களிப்பு | 98,025 |
| ஊ.ந.பொ.நிதி பங்களிப்பு | 24,506 |
| | **802,122** |

**10 ஏனைய படிகள்**

| | |
|---|---|
| வாழ்க்கைச் செலவுப் படிகள் | 195,692 |
| விசேட படிகள் | 83,242 |
| தலைவரின் படிகள் | 300,000 |
| உபதலைவரின் படிகள் | 240,000 |
| பதில் செயலாளரின் படிகள் | 115,590 |
| கணக்காளர் படிகள் | 68,805 |
| | **1,003,329** |

**வழங்கல்கள்**

**11 ஏனையவை**

| | |
|---|---|
| கூட்டங்களுக்கான சிற்றுண்டிகள் | 41,119 |

**12 மின்சாரம் மற்றும் நீா**

| | |
|---|---|
| மின்சாரம் | 74,534 |
| நீா | 4,200 |
| | **78,734** |

**13 ஏனையவை**

| | |
|---|---|
| சபை உறுப்பினா்களின் படிகள் | 424,567 |
| கணக்காய்வு குழு உறுப்பினா் படிகள் | 96,000 |
| கணக்காய்வுக் கட்டணம் | 110,000 |
| விளம்பரங்கள் | 96,096 |
| நானாவிதங்கள் | 90,125 |
| பயிற்சிப் பட்டறைச் செலவினங்கள் | 140,030 |
| | **956,818** |

## காணி, காணி அபிவிருத்தி அமைச்சு
## நில அளவைச் சபை

## 2012 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான
## பொதுக் கணக்கீட்டுக் கொள்கைகள்

### 01. பொதுக் கணக்கீட்டுக் கொள்கைகள்

1.1 தயாரிப்பு முறை

நிதிக்கூற்றுகள் , இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தினால் விதிக்கப்பட்ட கணக்கீட்டு நியமங்கள் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் ஏற்பாடுகள் ஆகியவற்றுக்கு அமைவாகத் தயாரிக்கப்படுகின்றன.

1.2 நிதிக்கூற்றுக்கள் அவை ஏற்பட்டதன் அடிப்படையில் தயாரிக்கப்படுகின்றன.

1.3 நிதிக்கூற்றுக்கள் மரபுரீதியான செலவின மரபொழுங்கு முறையின் கீழ் தயாரிக்கப்படுகின்றன.

### 02. சொத்துகள் அவற்றின் பெறுமதி அடிப்படையில்

2.1 நிலையான சொத்துகள் எழுதப்பட்ட பெறுமதியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2.2 தேய்மானம்

தேய்மானம் பின்வரும் வீதாசாரத்தில் குறைந்து செல்லும் மீதி முறையில் முன்னைய வருடங்களைப் போல் கணிப்பிடப்பட்டுள்ளது.

| **சொத்துகளின் வகைகள்** | **வீதாசாரம் %** |
|---|---|
| இயந்திர சாதனம் | 20 |
| தளபாடம் | 10 |
| கணனி | 25 |
| அலுவலக உபகரணங்கள் | 25 |

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல / My No. – எல்பீ/ஏ/எல்எஸ்சீ/எப்ஏ/2012/01 ඔබේ අංකය / உமது இல / Your No. දිනය / திகதி / Date – 2013 யூலை 31

தலைவர்,
நில அளவைச் சபை

**நில அளவைச் சபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

நில அளவைச் சபையின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதி நிலமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கமளித்தல் தகல்வல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 (1) ஆம் பிரிவு மற்றும் 2002 இன் 17 ஆம் இலக்க நில அளவை அதிகாரச்சட்டத்தின் 57(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் மன்றத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) ஆம் பிரிவின் பிரகாரம் ஒரு விரிவான அறிக்கை 2013 ஏப்ரல் 24 ஆந் திகதி மன்றத்தின் தலைவருக்கு வழங்கப்பட்டது.

## 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களிற்கு அமைவாக தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடிகள் அல்லது வழுக்கள் காரணமாக ஏற்படச் சாத்தியமான பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையாக நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு தேவையென முகாமைத்துவத்தினால் தீர்மானிக்கப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாட்டிற்கு முகாமைத்துவம் பொறுப்பாகும்.

අංක 306/72 පොල්දූව පාර, බත්තරමුල්ල , ශ්‍රී ලංකාව | இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை இலங்கை | No.306/72, Polduwa Road, Battaramulla , Sri Lanka
දුරකථනය / தொலைபேசி / Telephone – 2887028 /034 | ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No – 2887223 | ඉලෙක්ට්‍රොනික් තැපැල් / ஈ- மெயில் / E-mail – oaggov@sltnet.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வுப் பரிசோதனைகளின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயமொன்றைத் தெரிவித்தல் எனது பொறுப்பாகும். என்னால் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைவாக எனது கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. ஒழுக்க விதித் தேவைப்பாடுகளுடன் நான் அமைவுறுவதையும் நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டை பெற்றுக் கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது திட்டமிட்டு நடைமுறைப்படுத்தப்படுவதனையும் இந்நியமங்கள் எதிர்பார்க்கின்றன.

நிதிக் கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளை பெற்றுக் கொள்ளும் வகையில் நடைமுறைகள் அமுல்படுத்தப்படுவதனை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. தெரிவுசெய்யப்பட்ட நடைமுறைகளானது மோசடிகள் அல்லது வழுக்கள் காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படச் சாத்தியமான பொருண்மையான தவறான கூற்றுக்களின் இடர் மதிப்பீடுகளை உள்ளடக்கியதாக கணக்காய்வாளரின் தீர்ப்பின் அடிப்படையில் அமைந்திருந்தன. அவ் இடர்களை மதிப்பிடுகையில் சந்தர்ப்பத்திற்கேற்ற பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடுவதற்கு ஏற்றவாறு சபையின் நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கும் நியாயமானதாக சமர்ப்பிப்பதற்கும் தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகள் கணக்காய்வாளரினால் கருத்திற்கொள்ளப்பட்ட போதிலும் சபையின் உள்ளகக் கட்டுப்பாட்டின் விளைவுதிறன் மீது அபிப்பிராயமொன்றைத் தெரிவிப்பதற்காக கருத்தில் கொள்ளப்பட்டிருக்கவில்லை. முகாமைத்துவத்தினால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தப்பாடு மற்றும் பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்துவத்தினை மதிப்பாய்தல் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தல்களின் மதிப்பீடு போன்றவற்றினைக் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையொன்றை வழங்குவதற்காக என்னால் பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் போதுமானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

2012 திசெம்பர் 31 இல் உள்ளபடி நில அளவைச் சபையின் நிதி நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிசார் செயலாற்றல் மற்றும் காசோட்டம் என்பவற்றை நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களிற்கு அமைவாக உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்று நான் அபிப்ராயப்படுகின்றேன்.

### 2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமைகள்

நில அளவைச் சபையின் 2006 ஏப்ரல் 02 ஆந் திகதிய எல்எஸ்சீ/சீஜஆர்/02/2006 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் அதிகாரமளிக்கப்பட்ட நில அளவையாளர்களினால் ஏதேனுமோர் காணித் துண்டின் உரித்தினை ஒப்படைப்பதற்காக அல்லது ஏதேனுமோர் எல்லையினை மாற்றுவதற்காக தயாரிக்கப்படுகின்ற் திட்டவரைபடத்தின் அல்லது நில அளவைப்படத்தின் உறுதிப்படுத்திய பிரதியொன்றை அத்திட்டவரைபடத்தினை உறுதிப்படுத்திய திகதியிலிருந்து 30 நாட்களிற்குள் மாவட்ட நில அளவையாளர் அலுவலகங்களில் வைக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிச் செயலாற்றல் கூற்றின் படி, மீளாய்வாண்டில் சபையின் செயற்பாடுகளினால் ரூபா 1,429,573 மிகையொன்று ஏற்பட்டிருந்ததுடன் அதனையொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 1,050,797 ஆகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் நிதி விளைவுகளில் ரூபா 378,776 அல்லது 36 சதவீத முன்னேற்றமொன்று ஏற்பட்டிருந்தது. நில அளவையாளர்களிற்கு வழங்கப்பட்ட உத்தரவுப்பத்திர வருமானம் அதிகரித்தமை, நில அளவையாளர் பதிவு

செய்தல் வருமானம் உயர்வடைந்தமை மற்றும் வங்கி வட்டி வருமான அதிகரிப்பு என்பன இவ்வளர்ச்சிக்கு காரணங்களாகும்.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

2002 இன் 17 ஆம் இலக்க அளவைகள் அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்ட கருமங்களை நிறைவேற்றுவதன் செயன்முன்னேற்றம் தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

**(அ) 37(அ) பிரிவு**

நில அளவைக் கருமங்களில் ஈடுபட்டுள்ள நபர்களிற்கிடையே தொழில்சார் ஒழுக்கத்தினை பேணிச்செல்லல் சபையின் பிரதான நோக்கமாக இருந்ததுடன் மீளாய்வாண்டில் தீர்ப்பதற்காக இருந்த அதிகாரமளிக்கப்படாத நபர்களினால் தயாரிக்கப்பட்ட அளவைத் திட்டவரைபடங்கள் மற்றும் நில அளவையாளர்களின் ஒழுங்கீனங்கள் தொடர்பில் கிடைத்திருந்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை 88 ஆகும். அவற்றில் 70 முறைப்பாடுகளிற்காக தீர்வுகள் வழங்கப்பட்டிருந்ததுடன் மேலும் 18 முறைப்பாடுகளிற்கு தீர்வுகள் வழங்கப்பட வேண்டியிருந்தன.

**(ஆ) 37(இ) மற்றும் (உ) பிரிவுகள்**

2012 இன் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் 05 தொழில்சார் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு இலக்கிடப்பட்டிருந்த அதேவேளை மீளாய்வாண்டில் 06 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், நில அளவைச் சபையினால் உண்மையாக 02 நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தமையும் எஞ்சிய 04 நிகழ்ச்சித்திட்டங்கள் நில அளவைகள் திணைக்களத்தினால் ஒழுங்குசெய்யப்பட்டிருந்தவை என்பதும் அவதானிக்கப்பட்டது.

(இ) 37(ஊ) மற்றும் (எ) பிரிவுகள்

நில அளவையாளர் தொழிலுடன் தொடர்புபட்ட தகைமையினை பெற்றுக்கொள்ளும் பரீட்சையை நடாத்தல், கல்வி, பயிற்சி மற்றும் ஏற்றுக்கொள்ளல் போன்ற விடயங்களில் சமத்துவத்தினை தாபிப்பதற்காக வெளிநாட்டு அதிகாரிகளுடன் இணக்கப்பாட்டினை ஏற்படுத்திக் கொள்ளல் என்பது நோக்காகக் காணப்பட்ட போதிலும் அவற்றை அடைந்து கொள்வதற்காக எவ்வித வேலைத்திட்டமும் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

கா.அ.ம./5/501 ஆம் இலக்க கோவையின் படி அரசாங்க நிலங்கள் பொய்யான உறுதிகளினால் அரசுடமையிலிருந்து அகற்றப்பட்டமைக்கான குற்றச்சாட்டிற்கு ஆளாக்கப்பட்ட அனுமதிபெற்ற நில அளவையாளர் ஒருவருக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கையினை எடுக்குமாறு 2011 யூலை 03 ஆந் திகதிய அமைச்சுச் செயலாளரின் கடிதத்தினால் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் இது வரை அந்த உத்தியோகத்தர் தொடர்பில் புலனாய்வினை மேற்கொள்வதற்கேனும் சபை தவறியிருந்தது. மேலும் காணிகள் மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் மேலதிகச் செயலாளரின் 2012 யூலை 12 ஆந் திகதிய கடிதத்தின் மூலமும் குற்றம் சாட்டப்பட்டுள்ள நில அளவையாளர் அரசாங்க காணிகளிற்காக தனிப்பட்ட திட்டவரைபடங்களைத் தயாரித்திருந்த சந்தர்ப்பமொன்று அறிவிக்கப்பட்டிருந்ததுடன் அதற்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 4.3 செயற்பாட்டுச் செயற்திறனின்மை

சுபையின் காசுப் புத்தகத்தினை கணனி நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் தயாரிப்பதற்காக பொருத்தமான கணனி மென்பாகமொன்று பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

4.4 **பதவியணி நிர்வாகம்**

(அ) நில அளவைச் சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 04 ஆகும். அதாவது செயலாளர் பதவி – 01, கணனி தரவுப் பதிவாளர் / எழுதுவினைஞர் பதவி – 02 மற்றும் அலுவலக உதவியாளர் பதவி – 01 எனக் காட்டப்பட்ட போதிலும் கணக்குகள் விடயம் மற்றும் சபையின் நோக்கங்களிற்கும் கருமங்களிற்கும் உரித்தான சட்ட விடயங்கள் தொடர்பில் பதவி உருவாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையில் 2009 ஆம் ஆண்டு முதல் வெற்றிடமாகக் காணப்படுகின்ற செயலாளர் பதவிக்காக பதிற்கடமை அடிப்படையில் உத்தியோகத்தர் ஒருவரை நியமிப்பதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அங்கீகாரம் கிடைத்திருந்தது. 2009 ஜனவரி மாதம் முதல் பதிற்கடமை அடிப்படையில் உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதிவரை நிரந்தர உத்தியோகத்தர் ஒருவரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

5. **கணக்களிப் பொறுப்பும் நல் ஆளுகையும்**

5.1 **செயல்நடவடிக்கைத் திட்டம்**

நில அளவைச் சபையின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி, மீளாய்வாண்டில் நில அளவையாளர்களைப் பதிவுசெய்தல் இலக்கு 100 எனக் காட்டப்பட்டிருப்பினும், 55 நில அளவையாளர்கள் பதிவு செய்து கொண்டிருந்தனர்.

5.2 **பாதீட்டுக் கட்டுப்பாடு**

2012 ஆம் ஆண்டில் சபைக்காக பாதீடு தயாரிக்கப்படாதிருந்ததுடன் செலவின மதிப்பீடொன்று மாத்திரம் தயாரிக்கப்பட்டிருந்தது.

### 5.3 சுற்றாடல் மற்றும் சமூகப் பொறுப்பை நிறைவேற்றல்

முன்றத்தில் பதிவுசெய்யப்பட்டிருந்த நில அளவையாளர் ஒருவர் இரண்டு பெயர்களைப் பயன்படுத்தி திட்டவரைபட பிரதிகளைத் தயாரித்திருந்தமை தெரிவுப் பரிசோதனைகளில் வெளிப்படுத்தப்பட்டதுடன் இதன் காரணமாக திட்டவரைபில் குறிப்பிடப்பட்டுள்ள பெயரிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த முறைப்பாடு நிராகரிக்கப்படுவதாகவும் அவ்வாறான திட்டவரைபுகளின் சட்டரீதியான தன்மை தொடர்பில் சபை கவனம் செலுத்தியிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

---

முறமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பில் கணக்காய்வில் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்கள் காலத்திற்குக் காலம் தலைவரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதுடன் பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பிரச்சார நடவடிக்கைகள்

எச்.ஏ.எஸ். சமரவீர

கணக்காய்வாளர் தலைமை அதிபதி